முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் மீதான வழக்கு ரத்து

ஐகோர்ட் உத்தரவு

சென்னை, ஆக. 13: 2022ம் ஆண்டு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் குறித்து சி.வி.சண்முகம் அவதூறாக பேசியிருந்தார். இது தொடர்பாக திமுக பிரமுகர் அளித்த புகாரின் அடிப்படையில், திண்டிவனம் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டன இதை ரத்து செய்யக்கோரி சி.வி. சண்முகம் சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல்செய்யப்பட்டது. இந்த மனுவை நீதிபதி ஜி.ஜெயச்சந்திரன் விசாரித்தார். மனுதாரர் சார்பில் மூத்த வழக்கறிஞர் ஜான் சத்யன் ஆஜரானார். வாதங்களை கேட்ட நீதிபதி, சி.வி.சண்முகத்தின் பேச்சு மோசமானது தான். நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்று கருத்து தெரிவித்திருந்தார். இந்த வழக்கில் நேற்று தீர்ப்பளித்த நீதிபதி ஜி.ஜெயச்சந்திரன், முதல்வர் குறித்து அவதூறாக பேசியது தொடர்பாக முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் மீதான வழக்கை ரத்து செய்து உத்தரவிட்டார்.

போதை பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி

குன்றத்தூர் காவல் நிலையம் சார்பில் போதை பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி குன்றத்தூர் பேருந்து நிலையத்திலிருந்து சேக்கிழார் பள்ளி வரை நடந்தது. இதில் மாணவ, மாணவிகள் விழிப்புணர்வு பதாகைகளுடன் கலந்து கொண்டனர்.

தூய்மை பணியாளரின் மகள் நகராட்சி ஆணையராக நியமனம்

கல்வி தான் யாராலும் பறிக்க முடியாத சொத்து

முதல்வர் மு.க.ஸ்டாலின் டிவிட்டரில் பதிவு

சென்னை, ஆக. 13: சென்னை, தலைமைச்செயலகத்தில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் சார்பில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பணி நியமன ஆணையை வழங்கினார். இதில் மன்னார்குடியை சேர்ந்த தூய்மை பணியாளரின் மகள் துர்கா திருத்துறைப்பூண்டி நகராட்சி ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்து நிருபர்களிடம் அவர் பேசியதாவது: நகராட்சி ஆணையராக பணி ஆணையை முதல்வரின் கைகளால் வாங்கியது மகிழ்ச்சியளிக்கிறது. தமிழ்நாடு அரசு கொடுக்கும் அனைத்து சலுகைகளையும் பயன்படுத்தி படித்தாலே நாம் நல்ல நிலைக்கு செல்லலாம். நான் அதுபோன்று தான் அரசு பள்ளி மற்றும் கல்லூரியில் படித்தேன். டி.என்.பி.எஸ்.சி படிக்கும் போதும் அரசால் நடத்தப்படும் இலவச பயிற்சி மையங்களில் சேர்ந்து படித்து இன்றைக்கு நகராட்சி ஆணையராக பணி ஆணையை பெற்றுள்ளேன். என்னுடைய அப்பா மன்னார்குடி நகராட்சியில் தூய்மை பணியாளராக வேலை பார்த்தவர். அவரது ஒவ்வொரு கஷ்டங்களையும் நான் பார்த்துள்ளேன். என்னுடைய அப்பா நல்ல சட்டை போட்டது கிடையாது, நல்ல வேஷ்டி கட்டியது கிடையாது, நல்ல செருப்பு அணிந்தது கிடையாது. எப்போதும் காக்கி உடையில் தான் இருப்பார். நான் நல்லா இருக்கனும், நல்லா படிக்கனும்; என் பொண்ணு நான் பட்ட கஷ்டத்தை படக்கூடாது என நினைத்து அதற்காக நிறைய என் அப்பா இழந்துள்ளார். அவர் நல்ல சாப்பாடு கூட சாப்பட்டது கிடையாது. அவர் இந்த தருணத்தில் இருந்து இருந்தால் நல்லா இருந்து இருக்கும்; அவர் 7 மாசத்திற்கு முன்பு தவறிவிட்டார். இன்றைக்கு நான் நகராட்சி ஆணையராகி உள்ளேன். இந்த வாய்ப்பை வழங்கிய தமிழ்நாடு அரசுக்கும், முதல்வருக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்.

இந்த பேட்டியை கண்டு தனது டிவிட்டர் பக்கத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவிட்டிருப்பதாவது: நகராட்சி ஆணையராக பொறுப்பேற்கும் துர்கா அவர்களின் பேட்டியை கேட்டு அகமகிழ்ந்தேன். கல்வி தான் ஒரு தலைமுறையையே முன்னேற்றிடும் ஆற்றல் பெற்றது என்பதற்கு துர்காவே எடுத்துக்காட்டு; நான் மீண்டும் சொல்கிறேன் ‘கல்வி தான் யாராலும் பறிக்க முடியாத சொத்து’

கோவை உயர்மட்டப் பாலம் குறித்து

உண்மைக்குப் புறம்பான தகவலை பரப்பிய எஸ்.பி.வேலுமணி

அமைச்சர் எ.வ.வேலு கண்டனம்

சென்னை, ஆக.13: பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை:

கோவை ஆத்துப்பாலம் முதல் உக்கடம் சந்திப்பு ஒப்பணக்கார வீதி வரை, உயர்மட்டப்பாலம் அமைக்கும் திட்டத்துக்கு, 2010ம் ஆண்டு கலைஞரால் கருத்துரு உருவாக்கப்பட்டது. பாலக்காடு, பொள்ளாச்சி மற்றும் ஒப்பனக்கார வீதி சாலைகளில், அதிகப் போக்குவரத்துச் செறிவு இருந்ததாலும், உக்கடம் பகுதியில், போக்குவரத்துச் நெரிசல் மிக அதிகமாக இருந்ததாலும், இத்திட்டத்தைச் செயல்படுத்த கலைஞரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

2011 நவம்பர் 14ல் மாவட்ட ஆட்சியர் கூட்டத்தில், உயர்மட்டப்பாலம் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது. முந்தைய அதிமுக ஆட்சியில் இத்திட்டத்தை செயல்படுத்த மனம் இல்லாமல், 7 ஆண்டுகாலம் காலதாமதத்திற்குப் பின் 2018 ஏப்ரல் 2ம் தேதி பாலப்பணி தொடங்க ஒப்பந்தம் போடப்பட்டது. வேலுமணி, 7 ஆண்டு காலம் கோவை மாவட்ட மக்களின் மீது எவ்வித அக்கறையும் காட்டவில்லை.

10 ஆண்டுகால தாமதத்திற்குப் பின் 2018-19ம் நிதியாண்டில், 2021 ஜனவரி 24ம் தேதி, உயர்மட்டப் பாலத்தினை நீட்டித்து, மீண்டும் பணி துவங்க ஒப்பந்தம் போடப்பட்டது. 2021 மே 7ம் தேதி, முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் திமுக ஆட்சிப் பொறுப்பேற்றபோது, 12 சதவீத பாலப்பணிகள் மட்டுமே முடிந்து இருந்தன. முதல்வர் அறிவுரையின் படி, பணிகளை விரைவுபடுத்த வேண்டும் என்று, அறிவுரைகள் வழங்கி செயல்படுத்தியுள்ளேன். 88 சதவீதப் பணிகள் முடிக்கப்பட்டது. ரூ.318 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிந்துள்ளது.

போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும், கால விரயத்தைத் தவிர்த்து, பாதுகாப்பான பயணம் மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் முதல்வரால், கடந்த 9ம் தேதி பொது மக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது.

இதுபற்றி பத்திரிகைகள் பாராட்டியுள்ளதைப் பொறுத்துக் கொள்ள முடியாத வேலுமணி, உண்மைக்குப் புறம்பான செய்திகளை, பேட்டியாக அளித்துள்ளார். திமுக ஆட்சியால் பல பணிகள் செய்யப்பட்டுள்ளதை பாராட்ட மனமில்லை என்றாலும், குறை சொல்லாமல் இருந்திருக்கலாம்.

தற்போது, நடைபெற்று வரும் திருச்சி சாலை சுங்கம் பகுதியில், ஏறுதளம் மற்றும் இறங்குதளம் அமைக்கும் பணி வரும் 31ம் தேதிக்குள் முடிக்கப்படும். இப்பணி விரைவில் முடித்து, மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

சென்னை ஐகோர்ட் வளாகத்தில்

நாய்களை கட்டுப்படுத்துவது தொடர்பான அறிக்கை தாக்கல்

சென்னை, ஆக. 13: சென்னை உயர் நீதிமன்ற வளாகத்திற்குள் நாய்கள் நடமாட்டத்தை கட்டுப்படுத்துவது தொடர்பாக வழக்கறிஞர்கள் சங்கங்களின் ஆலோசனைகளை பெற்று அறிக்கை தாக்கல் செய்யுமாறு தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார்கவுன்சிலுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் திட, திரவ கழிவுகளை முறையாக மேலாண்மையை செய்து குப்பைகள் இல்லாத தூய்மையான வளாகமாக பராமரிக்க கோரி ராஜ்குமார் என்பவர் கடந்த 2017ம் ஆண்டு வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு பொறுப்பு தலைமை நீதிபதி டி.கிருஷ்ணகுமார், பி.பி.பாலாஜி ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது, வழக்கறிஞர்கள் தரப்பில், சென்னை உயர் நீதிமன்ற வளாகம் முழுவதும் 70 நாய்கள் சுற்றித்திரிவதாகவும், ஆனால் நாய்கள் யாரையும் துரத்தியதாகவோ, கடித்தாகவோ எந்த சம்பவமும் இல்லை என்றும் தெரிவித்தனர்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், நீதிமன்ற வளாகத்தில் சுற்றித் திரியும் நாய்களால் எதிர்காலத்தில் அசம்பாவிதம் ஏதும் நடைபெறாது என்பதற்கு எந்த உத்திரவாதமும் இல்லை.

எனவே, நாய்கள் சுற்றித் திரிவதை கட்டுப்படுத்துவது தொடர்பாக வழக்கறிஞர்கள் சங்கங்களின் கூட்டத்தை கூட்டி, ஆலோசனைகளை பெற்று 8 வாரங்களில் உயர் நீதிமன்ற தலைமை பதிவாளருக்கு தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி அறிக்கை அளிக்கவேண்டும் என்று உத்தரவிட்டு விசாரணையை தள்ளி வைத்தனர்.

வினேஷ் போகத்துக்கு அநீதி

தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

சென்னை, ஆக.13: மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகத் ஒலிம்பிக்கில் 100 கிராம் எடை அதிகமாக இருந்ததால் தகுதி நீக்கம், செய்து அநீதி இழைக்கப்பட்டதை கண்டித்து தமிழ்நாடு காங்கிரஸ் விளையாட்டு துறையின் சார்பில் சென்னை சத்தியமூர்த்தி பவனில் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்திற்கு காங்கிரஸ் விளையாட்டு துறையின் தலைவர் பெரம்பூர் நிசார் தலைமை வகித்தார். தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை கண்டன உரை நிகழ்த்தினார்.

இதில் மாநில துணைத் தலைவர் சொர்ணா சேதுராமன், மாநில பொதுச் செயலாளர் தளபதி பாஸ்கர், மோகன காந்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தமிழை மொழிப்பாடமாக படித்தவர்களுக்கே

உயர்கல்வியில் இடம் என கூறும் நிலை வர வேண்டும்

அமைச்சர் பொன்முடி பேச்சு

சென்னை, ஆக.13: சென்னை வளர்ச்சிக்கழகம், பன்னாட்டு தமிழ் மொழிப் பண்பாட்டு கழகம் மற்றும் அண்ணா பல்கலைக்கழகத்தின் பொறியியல் தொழில்நுட்ப தமிழ் வளர்ச்சி மையம் சார்பில், 2வது உலகத் தமிழ் வளர்ச்சி மாநாடு, சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் உள்ள விவேகானந்தர் அரங்கில் நேற்று தொடங்கியது. 2 நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டை, தமிழக உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி, தொடங்கி வைத்தார்.

மாநாட்டில் அமைச்சர் பொன்முடி பேசுகையில், சி.பி.எஸ்.சி.யில் கூட தமிழை ஒரு மொழிப் பாடமாக கொண்டு வர வேண்டும் என தமிழ் ஆர்வலர்கள் கோரிக்கை வைக்கிறார்கள். இதற்கான நடவடிக்கையை



அமைச்சர் அன்பில் மகேஷ் கொண்டு வருவார் என நம்புகிறேன். மேலும் பள்ளிக் கல்வியில் தமிழை ஒரு மொழிப்பாடமாக படித்தவர்களுக்கே ‘தனியார் பல்கலைக்கழகங்கள், உயர்கல்வியில் இடம் என்று கூறினால், அனைத்து மாணவர்களும் தமிழ்க் கல்வியை படிக்கும் வாய்ப்பு ஏற்படும். தமிழ் வளர்ச்சிக்கு உதவும்’ என்று பேசினார்.

மாநாட்டில் சட்டத் துறை அமைச்சர் ரகுபதி பேசும்போது, தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகத்தில் ‘சட்டத் தமிழ்’ எனும் புதிய பாடம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார். வி.ஐ.டி. பல்கலைக்கழக வேந்தர் விஸ்வநாதன் பேசும்போது, நாடாளுமன்றத்தில் முந்தைய காலங்களில் சபாநாயகர் மற்றும் உறுப்பினர்கள் ஆங்கிலத்தில் பேசியதாகவும், தற்போது இந்தியாவின் தலைநகர் இந்தி தலைநகராக மாறி இருப்பதாகவும், அந்த நிலை மாற வேண்டும் என்றும் கூறினார்.

அமைச்சர்கள் செஞ்சி மஸ்தான், அன்பில் மகேஷ் பொய்யா மொழி ஆகியோரும் பங்கேற்றனர். சென்னை வளர்ச்சிக்கழகம் பன்னாட்டு தமிழ் மொழிப் பண்பாட்டு கழகத்தின் தலைவர் சம்பத், வி.ஐ.டி. பல்கலைக்கழகத்தின் வேந்தர் விஸ்வநாதன், வி.ஜி.பி. நிறுவனங்கள் தலைவர் வி.ஜி. சந்தோசம், முன்னாள் துணை வேந்தர் வேல்ராஜ், தமிழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் ராஜேந்திரன் உள்பட பலர் பங்கேற்றனர்.

சென்னை ஐஐடி 6வது முறையாக... முதல் பக்க தொடர்ச்சி

பி.எஸ்.ஜி.ஆர். கிருஷ்ணம்மாள் பெண்கள் கல்லூரி 7-வது இடத்திலும், கோயம்புத்தூர் பி.எஸ்.ஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரி 11-வது இடத்தையும், லயோலா கல்லூரி 8-வது இடத்திலும், இதே வரிசையில் சென்னை மாநிலக் கல்லூரி 13-வது இடத்திலும் இருக்கிறது.

ஆராய்ச்சி நிறுவன தரவரிசையில் தமிழ்நாட்டில் உள்ள சென்னை ஐ.ஐ.டி. 2-வது இடத்தையும், வி.ஐ.டி. 13-வது இடத்தையும், அண்ணா பல்கலைக்கழகம் 17-வது இடத்தையும் பெற்றுள்ளது.

இன்ஜினியரிங் பட்டியலில், 100 கல்வி நிறுவனங்களில் முதல் இடத்தை சென்னை ஐ.ஐ.டி. தொடர்ந்து 9-வது முறையாக தக்க வைத்துள்ளது. இதில் திருச்சி தேசிய தொழில்நுட்ப நிறுவனம் 9-வது இடத்திலும், வி.ஐ.டி. 11-வது இடத்திலும், அண்ணா பல்கலைக்கழகம் 14-வது இடத்திலும் உள்ளது.

இதே போல், மேலாண்மை பிரிவில் சென்னை ஐ.ஐ.டி. 16-வது இடத்திலும், பார்மசி பிரிவில் ஊட்டி ஜே.எஸ்.எஸ். பார்மசி கல்லூரி 4-வது இடத்திலும், எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில் நுட்ப நிறுவனம் 11-வது இடத்திலும் இடத்திலும், பல் மருத்துவம் பிரிவில் சவீதா மருத்துவம் மற்றும் தொழில்நுட்ப அறிவியல் நிறுவனம் முதல் இடத்திலும், எஸ்.ஆர்.எம். பல் மருத்துவ கல்லூரி 7-வது இடத்திலும், சட்டப்பிரிவில் சவீதா மருத்துவம் மற்றும் தொழில்நுட்ப அறிவியல் நிறுவனம் 13-வது இடத்திலும், தஞ்சாவூர் சண்முகா கலை அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி கல்வி 14-வது இடத்திலும், கட்டிடப்பிரிவில் தேசிய தொழில்நுட்ப நிறுவனம் 8-வது இடத்திலும், எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் 11-வது இடத்திலும் தமிழ்நாட்டை சேர்ந்த கல்வி நிறுவனங்கள் இடம் பெற்றுள்ளன.

மருத்துவம் சார்ந்த தரவரிசையில், அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனம் முதல் இடத்தையும், வேலூர் கிறிஸ்தவ கல்லூரி 3-வது இடத்தையும், அம்ரிதா விஷ்வ வித்யாபீடம் 8-வது இடத்தையும், சென்னை மருத்துவக் கல்லூரி 10-வது இடத்தையும், சவீதா மருத்துவம் மற்றும் தொழில்நுட்ப அறிவியல் நிறுவனம் 12-வது இடத்தையும், பெற்று இருக்கிறது.

மாநிலங்களில் உள்ள பொதுப்பல்கலைக் கழகங்களின் பட்டியலில் சென்னை அண்ணா பல்கலைக் கழகம் முதல் இடத்தையும், கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக் கழகம் 8-வது இடத்தையும், நவீனமயமாக்கப்பட்ட பிரிவின் கீழ் வருகின்ற 10 கல்வி நிறுவனங்களில் அண்ணா பல்கலைக் கழகமும் இடம் பெற்றுள்ளது.

RELIANCE Asset Reconstruction

ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெட்

பதிவு அலுவலகம்: 11ஆவது தளம், வடக்குப் பக்கம், ஆர்-டெக் பார்க், I, மேற்கு விரைவு நெடுஞ்சாலை, கோரிகான் (கிழக்கு) மும்பை-400063

சுவாதீன அறிவிப்பு [காண்க விதி 8(1)]

(அசையா சொத்திற்காக)

இவ்வாறிருக்க, ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெட் ஆர்ஏஆர்சி 052 (ஐபி ரிடெய்ல்) பொறுப்பாட்சி ஆனது 28.09.2018 தேதியிட்ட உரிமை ஒதுக்கீடு ஒப்பந்தப் பத்திரம் மூலம் மூல கடனீந்தோர் இந்தியன் வங்கி வசமிருந்து நிதிச் சொத்துகளைக் கைப்பற்றியுள்ளது. ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரி பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 விதிமுறை 13 (12) இன் கீழ் மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை [அமலாக்கம்] விதிகள், 2002 இன் விதி 3 உடன் பிரிவு 13(2) கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, 05.10.2023 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பு வழங்கி, கடன்தாரர்கள் M/s. கன்மத் எண்டர்பிரைசஸ், (கடன் கணக்கு எண்.6197172969) எண்.32, ஜி 2, விநாயகா அபார்ட்மென்ட்ஸ், அஸீஸ் நகர் முதல் தெரு, கோடம்பாக்கம், சென்னை–600024 2) திரு.சுரேஷ்வாசன், த/பெ, லங்கா ஸ்ரீனிவாசலு, குடியிருக்கும் இடம்: பிளாட் எண். ஜி1, வடக்குப் பகுதி, கணேஷ் பிளாட்ஸ், எண்.271 ஏ, பள்ளி தெரு, பெரம்பூர், சென்னை–600 011, 3) திரு.ஏ.சரண்ராஜ் த/பெ, (மறைந்த அண்ணாதுரை), குடியிருக்கும் இடம்: எண்.10,(43), நேரு தெரு, பரமசிவம் நகர், பிரதான சாலை, திருக்கழுக்குன்றம்–603 910, 4 திருமதி. சந்திரா, க/பெ, குடியிருக்கும் இடம்: (மறைந்த அண்ணாதுரை), குடியிருக்கும் இடம்: எண்.10,(43), நேரு தெரு, பரமசிவம் நகர், பிரதான சாலை, திருக்கழுக்குன்றம்–603 910, (ஜாமீன்தாரர்) ஆகியோர், கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிட்ட தேதியின்படி **ரூ.1,93,85,349.80/– (ரூபாய் ஒரு கோடியே தொன்னூற்று மூன்று இலட்சத்து எண்பத்து ஐந்தாயிரத்து முந்நூற்று நாற்பத்து ஒன்பது மற்றும் பைசா எண்பது மட்டும்)** மொத்தத் தொகையை முழுப் பணப்பட்டுவாடா தேதி வரை அதற்கான எதிர்கால வட்டியுடன் சேர்த்து, மேற்கூறிய கோரிக்கை அறிவிப்புத் தேதியிலிருந்து அறுபது (60) நாட்கள் காலத்திற்குள் திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தார்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்/ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்கள் நிலுவைத்தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியுள்ளனர். கீழே கையொப்பமிட்டவர் மேற்குறிப்பிட்ட சட்டத்தின் இன் விதி 8 உடன் சட்டத்தின் பிரிவு 13 (4) கீழ் அவருக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி இங்கே கீழே விவரிக்கப்பட்ட சொத்தினை **இந்த 8, ஆகஸ்ட் 2024** அன்று சுவாதீனம் செய்துள்ளார்.

கடன்தாரர்/ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்கள் அவர்களுக்குக் குறிப்பிட்டும் மேலும் பொதுமக்களுக்குப் பொதுவாகவும் இதன்மூலம் எச்சரிக்கப்படுவதாவது: சொத்துகளுடன் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள வேண்டாம். மேலும் மேற்கூறிய சொத்துகள் உடனான அனைத்து நடவடிக்கைகளும் கடனைத் திருப்பிச் செலுத்தும் வரையிலான **07.08.2024 தேதியின்படி ரூ. 2,20,38,828.18/– (ரூபாய் இரண்டு கோடியே இருபது இலட்சத்து முப்பத்தெட்டாயிரத்து எண்ணூற்று இருபத்தெட்டு மற்றும் பைசா பதினெட்டு மட்டும்)** தொகைக்காக, அதற்கான எதிர்கால வட்டி மற்றும் செலவுடன் சேர்த்து **ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெடின்** வசூலுக்கு உட்படும்.

கடனீட்டுச் சொத்துகளை மீட்பதற்கு கால அவகாசம் கிடைக்கப்பெறுதல் குறித்த, சட்டத்தின் பிரிவு 13 இன் உட்–பிரிவு (8) விதிமுறைகள் கடன்தாரர் கவனத்திற்குக் கொண்டுவரப் படுகின்றன. கடன்தாரர் ஆர்ஏஆர்சிக்குச் சேர வேண்டிய நிலுவைத் தொகை மற்றும் அசையா சொத்துகளின் விற்பனை அல்லது உரிமை மாற்ற தேதிக்கு முன்னர் ஏற்படும் அனைத்து செலவுகள், கட்டணங்கள் மற்றும் ஏற்படும் செலவினங்கள் ஆகியவற்றை செலுத்திவிட்டால், ஆர்ஏஆர்சியால் கடனீட்டு சொத்துகள் விற்பனை அல்லது உரிமை மாற்றம் செய்யப்படாது மற்றும் கடனீட்டுச் சொத்துகளை விற்பனை அல்லது உரிமை மாற்றம் செய்ய அடுத்தகட்ட நடவடிக்கையில் ஆர்ஏஆர்சி ஈடுபடாது.

கடனீட்டுச் சொத்துகளின் விவரங்கள்

இனம் எண்.1: (திரு.சுரேஷ் வாசனுக்குச் சொந்தமான சொத்து)

பிளாட் எண்.ஜி1, தரைத்தளம், கணேஷ் பிளாட்ஸ், 27/15, பள்ளி சாலை, பெரம்பூர், சென்னை–11, R.S.No.395/2, T.S.No.395/93, பிளாக் எண்.23, கலெக்டர் சான்றிதழ் எண்.60, பழைய சர்வே எண்.115 மற்றும் 116, பெரம்பூர் கிராமத்தில் பிரிக்கப்படாத பங்கு 397 ச.அடியுடன் 590 ச.அடி பரப்பளவு உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள சொத்து. எல்லைகள் பின்வருமாறு: **வடக்கில்:** திவ்யா அபார்ட்மென்ட்ஸ், **கிழக்கில்:** திரு.எல்.ஸ்ரீபதிக்குச் சொந்தமான சொத்து, **தெற்கில்:** ராஜா அபார்ட்மென்ட்ஸ், **மேற்கில்:** பள்ளி சாலை.

இனம் எண்.2: (திரு.சுரேஷ் வாசனுக்குச் சொந்தமான சொத்து)

கும்மிடிப்பூண்டி துணை பதிவு மாவட்டம், மனை எண்.30, பாலாஜி நகர், ஜிஎன்டி சாலை, பெத்திகுப்பம், கும்மிடிப்பூண்டி வட்டம், திருவள்ளூர் மாவட்டம், S.No.174/2 & 174/1B பெத்திகுப்பம் கிராமம் மற்றும் பஞ்சாயத்தில் 2020 ச.அடி பரப்பளவு உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள சொத்து. எல்லைகள் பின்வருமாறு: **வடக்கில்:** லே அவுட் சாலை (ஸ்ரீ பாலாஜி நகர்), **தெற்கில்:** காலி நிலம், **கிழக்கில்:** மனை எண்.31, **மேற்கில்:** மனை எண்.29.

இனம் எண்.3: (திருமதி.சந்திரா மற்றும் திரு.சரண்ராஜுவுக்கு சொந்தமான நிலம் மற்றும் கட்டிடம் உள்ள சொத்து)

திருக்கழுக்குன்றம் துணை பதிவு மாவட்டம், புதிய கதவு எண்.10, நேரு தெரு, பரமசிவம் நகர் பிரதான சாலை, திருக்கழுக்குன்றம் –603109, சர்வே எண்.34/1A1B, திருக்குழுக்குன்றம் டவுன் பஞ்சாயத்து மற்றும் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் 7425 ச.அடி பரப்பளவு மற்றும் 432 ச.அடி ஆர்சிசி கட்டிடம், 344 ச.அடி ஓட்டுக்கூரை உள்ள வீடு உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி நிலம் உள்ள சொத்து. எல்லைகள் பின்வருமாறு: **வடக்கில்:** திரு.ரகுபதிக்குச் சொந்தமான நிலம், **தெற்கில்:** திரு.வரதனுக்குச் சொந்தமான கதவு எண்.12/43 உள்ள நிலம் மற்றும் கட்டிடம் உள்ள சொத்து, **கிழக்கில்:** பரமசிவம் நகர் நேரு தெரு, **மேற்கில்:** சுடலை புறம்போக்கு

இடம்: சென்னை | ஒம்/– P.ராஜேஷ் குமார், அதிகாரப்பூர்வ அதிகாரி
தேதி: 08.08.2024 | ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெட்

TATA

டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

பதிவு முகவரி: 11ஆவது தளம், டவர் A, பெனின்சுலா வர்த்தகப் பூங்கா, கண்பத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை – 400013.
கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், எண்.6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024.

அசையாச் சொத்து விற்பனை அறிவிப்பு

(கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதி 8 (6) மற்றும் விதி 9(1) கீழ்)

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8 (6) மற்றும் விதி 9(1) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனை மின்–ஏலம் அறிவிப்பு

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கீழ்க்காணும் கடன்தாரர் மற்றும்/ உப–கடன்தாரர், அல்லது அவர்தம் சட்டப்பூர்வ வாரிசுகள்/பிரதிநிதிகள் (கடன்தாரர்கள்) ஆகியோருக்கு குறிப்பாக வழங்கப்படும் அறிவிப்பாவது, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (டிசிஎச்எப்எல்) வசம் அடமானம் வைக்கப்பட்ட, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது, கீழே குறிப்பிட்ட கடன்தாரர் மற்றும் உப–கடன்தாரர்களிடமிருந்து நிலுவைத்தொகைகளை மீட்பதற்காக **‘உள்ளது உள்ளவிடத்தில்’ & ‘உள்ளது உள்ளவாறு’** மேலும் **‘உள்ளது எதுவோ அது’** அடிப்படையில் **30–08–2024** நாளில் விற்பனை செய்யப்பட உள்ளது. நிர்ணய விலை மற்றும் முன்வைப்புத்தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. இதன்மூலம் வழங்கப்படும் அறிவிப்பாவது, விற்பனை ஒத்தி வைப்பு/ விற்பனை நிறுத்தம் ஏதும் இல்லாதபட்சத்தில், மேற்கூறிய கடனீட்டுச் சொத்து/ சொத்து ஆனது மேற்கூறிய **30–08–2024** நாளில் பிற்பகல் **2.00** மணிக்கு மின்–ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான முன்வைப்புத்தொகை கேட்பு வரைவோலை அடங்கிய முத்திரையிடப்பட்ட உறையானது கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், எண்.6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024 இடத்தில் 29–08–2024 அன்று மாலை 5 மணி வரை அல்லது அதற்கு முன்பாக டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

கடனீட்டுச் சொத்து/ அசையாச் சொத்து விற்பனை இங்கே கீழே விவரிக்கப்பட்ட குறு விவரங்களின்படி ‘உள்ளது **உள்ளவிடத்தில்** நிபந்தனையில்’ ஆனதாகும்:

வ. எண்	கடன் கணக்கு எண் மற்றும் கிளை	கடன்தாரர்(கள்) / உப-கடன்தாரர்(கள்) / சட்டப்பூர்வ வாரிசு(கள்) / சட்டப்பூர்வ பிரதிநிதி/ ஜாமீன்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பின்படி தொகை	நிர்ணய விலை	முன்வைப்புத் தொகை	சுவாதீனம் வகை
1.	TCHHL04040 00100107273 & TCHIN040400 0100108697	திரு. கஜேந்திர கொல்லபள்ளி திருமதி. ரம்யா	ஒப்பந்த எண். TCHHL0404000100107273 இன்படி உங்களால் செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ.34,24,097/– மற்றும் ஒப்பந்த எண். TCHIN0404000100108697 இன்படி உங்களால் செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ.1,11,916/– மொத்தம் ரூ.35,36,013/–& 08.02.2024	பிளாட் எண்.11– ரூ.22,90,000/– மற்றும் பிளாட் எண்.12– ரூ.22,90,000/–	பிளாட் எண்.11– ரூ.2,29,000/– மற்றும் பிளாட் எண்.12– ரூ.2,29,000/–	கையக

அசையாச் சொத்து விவரம்: காஞ்சிபுரம் மாவட்டம், தற்போது குன்றத்தூர் வட்டம், ஸ்ரீ பெரும்புதூர் வட்டம், வட்டம்பாக்கம் கிராமம், ச.எண்.93/33 மற்றும் ச.எண்.93/18, பட்டா எண்.1258 மற்றும் 1259 இன்படி புதிய சர்வே எண். 93/18a மற்றும் 93/33a இல் உள்ள ஒஎம்எஸ் க்ரீன் சிட்டியில் 1590 ச.அடி பரப்பளவு உள்ள மனை எண்.11 மற்றும் 1590 ச.அடி பரப்பளவு உள்ள மனை எண்.12 ஆகிய இரண்டும் சேர்ந்து மொத்தம் 3180 ச.அடி பரப்பளவு உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள சொத்து. **எல்லைகள் மற்றும் அளவீடு: மனை எண்.11: வடக்கில்:** 23 அடி சாலை – 53 அடி, **தெற்கில்:** மனை எண்.12 53 அடி, **கிழக்கில்:** மனை எண்.10 – 30 அடி, **மேற்கில்:** காலி நிலம் – 30 அடி, பரப்பளவு 1590 ச.அடி, **எல்லைகள் மற்றும் அளவீடு: மனை எண்.12: வடக்கில்:** மனை எண்.11 – 53 அடி, **தெற்கில்:** 23 அடி சாலை – 53 அடி, **கிழக்கில்:** மனை எண்.13 – 30 அடி, **மேற்கில்:** காலி நிலம் – 30 அடி, பரப்பளவு 1590 ச.அடி.செங்கல்பட்டு பதிவு மாவட்டம், சுங்குவார்சத்திரம் துணை பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ள சொத்து.

வ. எண்	கடன் கணக்கு எண் மற்றும் கிளை	கடன்தாரர்(கள்) / உப-கடன்தாரர்(கள்) / சட்டப்பூர்வ வாரிசு(கள்) / சட்டப்பூர்வ பிரதிநிதி/ ஜாமீன்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பின்படி தொகை	நிர்ணய விலை	முன்வைப்புத் தொகை	சுவாதீனம் வகை
2.	TCHHL04040 00100084281	திரு. C முகமது ஹனீப் திருமதி ரேஷ்மாஷாஹதியா C S	Rs. 2,25,96,684/- ------- 09-11-2022	பிளாட் எண்.S1– ரூ.55,00,000/– மற்றும் பிளாட் எண்.S2– ரூ.50,00,000/– மற்றும் பிளாட் எண்.S3– ரூ.50,00,000/–	பிளாட் எண்.S1– ரூ.5,50,000/– மற்றும் பிளாட் எண்.S2– ரூ.5,00,000/– மற்றும் பிளாட் எண்.S3– ரூ.5,00,000/–	கையக

அசையாச் சொத்து விவரம்: அனைத்து துண்டு மற்றும் பகுதி அடங்கிய அட்டவணை–A சொத்து (சொத்தின் மொத்த அளவு) சென்னை மாநகராட்சி எல்லைக்குள், புலியூர் கிராமம், எழும்பூர் வட்டம், சென்னை மாவட்டத்தின், சர்வே எண்கள். 125/1 மற்றும் 125/4, டி.எஸ். எண். 6/6, பிளாக் எண். 10 இல் அடங்கிய, பழைய கதவு எண். 35/1, முந்தைய கதவு எண். 35/5 மற்றும் தற்போது கதவு எண்கள். 101/1 மற்றும் 101/2, பாரி தெரு, புலியூர், சூளைமேடு, சென்னை–600094 இல் 2395 சதுர அடி பரப்பளவு உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதிகளும் உள்ள சொத்து. **எல்லைகள்: வடக்கில்:** பாரி தெரு, **தெற்கில்:** காலியாக, **கிழக்கில்:** பழைய கதவு எண். 35, புதிய கதவு எண். 99, **மேற்கில்:** பழைய கதவு எண். 35/2, புதிய கதவு எண். 102. **அளவீடு:** கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கம்–36 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம்–35 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கம்–74 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம்–66 அடி. மத்திய சென்னை பதிவு மாவட்டம் மற்றும் கோடம்பாக்கம் சார் பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது.

அட்டவணை ‘B’ சொத்து: (சொத்து இதன்மூலம் உரிமை மாற்றப்பட்டது) ஃபிளாட் எண் S2 என்ற, இரண்டாம் தளத்தில் 558 சதுர அடி கீழ்ப்பரப்பின் பரப்பளவுடன் அட்டவணை ‘A’ இல் குறிப்பிடப்பட்ட சொத்தில் நிலத்தின் பாகம் பிரிக்கப்படாத பங்கு 248 சதுர அடி மற்றும் ஃபிளாட் எண்.S3 என்ற இரண்டாம் தளத்தில் 830 சதுர அடி கீழ்ப்பரப்பின் பரப்பளவுடன் அட்டவணை ‘A’ குறிப்பிட்ட சொத்தில் நிலத்தின் பாகம் பிரிக்கப்படாதப் பங்கு 370 சதுரடி

மேலும் ஃபிளாட் எண். S1 என்ற இரண்டாம் தளத்தில் 1019 கீழ்ப்பரப்பின் பரப்பளவுடன் அட்டவணை ‘A’ குறிப்பிட்ட சொத்தில் பாகம் பிரிக்கப்படாதப் பங்கு 454 சதுரடி. கட்டிட பரப்பளவு 558 சதுரடி பொதுப் பரப்புகள் உட்பட தூண் தளத்தில் ஒரு மேற்கூரையிட்ட கார் நிறுத்துமிடம் உட்பட, அடோன் ஆக பெயரிடப்பட்ட அபார்ட்மென்ட் உள்ள சொத்து.

வ. எண்	கடன் கணக்கு எண் மற்றும் கிளை	கடன்தாரர்(கள்) / உப-கடன்தாரர்(கள்) / சட்டப்பூர்வ வாரிசு(கள்) / சட்டப்பூர்வ பிரதிநிதி/ ஜாமீன்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பின்படி தொகை	நிர்ணய விலை	முன்வைப்புத் தொகை	சுவாதீனம் வகை
4.	TCHHL04040 00100089054 & TCHIN040400 0100089711	திரு. வினயசங்கர் S & திருமதி.S ஷர்மிளா	ஒப்பந்த எண். TCHHL0404000100089054 இன்படி உங்களால் செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ.34,57,648/– மற்றும் ஒப்பந்த எண். TCHIN0404000100089711 இன்படி உங்களால் செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ.80,922/– மொத்தம் ரூ.35,38,570/– (ரூபாய் முப்பத்து ஐந்து இலட்சத்து முப்பத்து எட்டாயிரத்து ஐநூற்று எழுபது மட்டும்) & 08.02.2024	ரூ.50,00,000/– (ரூபாய் ஐம்பது லட்சம் மட்டும்)	ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்)	கையக

அசையா சொத்தின் விவரங்கள்: மத்திய சென்னை பதிவு மாவட்டம், வில்லிவாக்கம் சார் பதிவு மாவட்டம், அம்பத்தூர் வட்டம், சென்னை மாவட்டம், முன்னதாக திருவள்ளூர் மாவட்டம், சென்னை மாநகராட்சி எல்லைக்குள் உள்ள மனை எண்.38, செயிண்ட் அந்தோணி நகர், டிஎஸ்எல்ஆர் வார்டு – E இன்படி சர்வே எண்.663, பிளாக் எண்.17, T.S.No. 8/34, கொரட்டூர் கிராமத்தில் மொத்தம் உள்ள 1741.28 ச.அடி பரப்பளவு உள்ள சொத்தில் 1500 ச.அடி பரப்பளவு உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள காலி நிலம் உள்ள சொத்து. **எல்லைகள்: வடக்கில்:** 24 அடி அகல சாலை, **தெற்கில்:** காலி நிலம், **கிழக்கில்:** மனை எண்.38 இன் எஞ்சிய பகுதி, **மேற்கில்:** மனை எண்.39. **அளவீடு:** வடக்கு பக்கம்: 30 அடி 0 அங்குலம், தெற்கு பக்கம்: 40 அடி 0 அங்குலம், கிழக்கில்: 35 அடி 4 அங்குலம், மேற்கில்: 69 அடி 0 அங்குலம். 1500 ச.அடி பரப்பளவு உள்ள சொத்து.

ஏலத்தில், பொதுவாக பொதுமக்கள் தனிப்பட்டு தங்கள் ஏலப்புள்ளி(களை) சமர்ப்பிக்க வரவேற்கப்படுகின்றனர். கடன்தாரர்(கள்)/உப–கடன்தாரர் (கள்) ஆகியோருக்கு இந்த அறிவிப்பு பிரசுரமான தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் மேற்கொண்டு வட்டியுடன் மொத்த நிலுவைகளைச் செலுத்த இதன்மூலம் கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது. அவ்வாறு செலுத்த தவறினால் அசையாச் சொத்து திட்டமிட்டபடி விற்பனை செய்யப்படும். ஏலத்தேதிக்கு முன்பாக மேற்கூறிய நிலுவைத்தொகை, வட்டி மற்றும் செலவுகளுடன் (விற்பனை செலவு உட்பட) அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் வழங்கப்பட்டால் அல்லது இவ்வித கடனீட்டுக் கடன்தொகை, வட்டி மற்றும் செலவுகள் செலுத்தப்பட்டுள்ளன என்று அவருடைய திருப்திக்குரியவாறு சான்று அளிக்கப்பட்டால் மின்னணு ஏலம் நிறுத்தப்படும்.

இந்த விற்பனை தொடர்பாக ஏதேனும் பணியை செயல்படுத்திக் கொண்டிருக்கும் அலுவலர் அல்லது பிற நபர், விற்கப்படும் அசையாச் சொத்தில் ஏதேனும் பயனைக் கைப்பற்ற அல்லது கைப்பற்ற முயற்சிக்க நேரடியாக அல்லது மறைமுகமாக ஏலப்புள்ளி அளிக்கலாகாது. விற்பனையானது கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இல் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் பின்வரும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டது ஆகும்:

குறிப்பு: மின்–ஏலம் ஆனது https://www.bankauctions.com என்ற இணைய முகப்பு மூலம் 30-08-2024 அன்று பிற்பகல் 2.00 மணி முதல் 3.00 மணிக்குள் தலா 10 நிமிடங்கள் வரையறுக்கப்பட்ட நீட்டிப்புடன் நடைபெறும்.

விதிமுறைகள் மற்றும் நிபந்தனை:

1.இங்கே கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் கீழே கையொப்பமிட்டவருக்கு நன்கு தெரிந்த வரையில் தெரிவிக்கப்பட்டுள்ளன, ஆனால் கீழே கையொப்பமிட்டவர் இந்த அறிவிப்பில் ஏதேனும் பிழை, தவறான அறிக்கை அல்லது விடுபடுதலுக்கு பொறுப்பேற்க மாட்டார். ஏலப்புள்ளி தொகை, அல்லது ஏலதாரரிடம் ஏதேனும் பூசல் எழுமானால், அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவுரிமைக்கு உட்பட்டு அசையாச் சொத்து மீண்டும் ஒருமுறை ஏலத்திற்கு வைக்கப்படும். 2. நிர்ணய விலைக்குக் குறைவாக அசையாச் சொத்து விற்பனை செய்யப்பட மாட்டாது. 3. ஏலம் உயர்த்தும் தொகை ஆவது: **ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)** 4. சொத்து கொள்முதலுக்காக சமர்ப்பிக்கப்படும் அனைத்து ஏலப்புள்ளிகளும் கிளை முகவரியில் மாற்றத்தக்க வகையில் **“டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்”** பெயரிலான கேட்பு வரைவோலை மூலம் மேற்குறிப்பிட்டவாறான முன்வைப்புத்தொகையால் இணைக்கப்பட்டிருக்கப்பட வேண்டும். வெற்றிபெறாத ஏலதாரர்களுக்கு ஏலம் முடிந்த பிறகு கேட்பு வரைவோலைகள் திருப்பியளிக்கப்படும். NEFT/RTGS/IMPS வழியே முன்வைப்புத்தொகைச் செலுத்துவதற்கு, அதிகாரப்பூர்வ அதிகாரியை தொடர்பு கொள்ளவும். 5. உயர்ந்தபட்ச ஏலதாரர், ஏலப்புள்ளி அளிக்க அவர் எப்போதும் சட்டப்பூர்வத் தகுதியடைந்தவர். மேலும் ஏலப்புள்ளித் தொகை நிர்ணய விலைக்குக் குறைவில்லாதது என்பதைப் பொறுத்து வெற்றிகர ஏலதாரராக அறிவிக்கப்படுவார். அளிக்கப்பட்ட விலை பற்றாக்குறையென தெளிவாகக் காணப்படுகையில் உயர்ந்தபட்ச ஏலப்புள்ளியை ஏற்க மறுப்பது அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவுரிமை முடிவிலானது ஆகும். 6. பதிவு செய்யப்பட்ட காரணங்களுக்காக, விற்பனை ஒத்தி வைத்தல்/நிறுத்துதல் என்பது அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவுரிமை முடிவிலானது ஆகும். **7. முன் அனுமதியில் 20–08–2024 அன்று காலை 11 மணி முதல் மாலை 5.00 மணிக்குள் அசையாச் சொத்தினை பார்வையிடலாம்.** 8. வெற்றிகர ஏலதாரராக அறிவிக்கப்பட்ட நபர், இவ்வித அறிவிப்புக்குப் பிறகு உடனடியாக, 24 மணி நேரத்திற்குள் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் முன்வைப்புத்தொகை உள்ளடக்கமாக கொள்முதல் பணம்/ ஏலப்புள்ளித் தொகையின் இருபத்தைந்து சதவீதத்தைச் செலுத்த வேண்டும் மேலும் இவ்விதம் செலுத்தத் தவறினால், சொத்து உடனடியாக புதிதாக ஏலத்திற்கு வைக்கப்படும்/தனி ஒப்பந்தம் மூலம் விற்கப்படும். 9. மேற்கூறியவாறு முதற்கட்டத் தொகைச் செலுத்தப்பட்டு விட்டால், செலுத்த வேண்டிய கொள்முதல் பணத்தின் மீதித்தொகையானது சொத்து விற்பனை உறுதியான தேதியிலிருந்து, இந்த நாளைத் தவிர்த்து, 15 ஆம் நாளில் அல்லது அதற்கு முன்பாக, அல்லது 15ஆவது நாள் ஞாயிற்றுக்கிழமை அல்லது பிற விடுமுறையாக அமைந்தால், 15வது நாளுக்குப் பிந்தைய முதல் அலுவலக நாளில் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் கொள்முதலாளரால் செலுத்தப்பட வேண்டும். 10. மேற்குறிப்பிட்ட காலத்திற்குள் பணப்பட்டுவாடாச் செய்யத் தவறும்பட்சத்தில், சொத்து புதிதாக ஏலத்துக்கு வைக்கப்படும்/ தனி ஒப்பந்தம் மூலம் விற்கப்படும். முன்வைப்புத்தொகை உட்பட செலுத்தியத் தொகை **டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்** மூலம் கைக்கொள்ளப்படும். மேலும் தவறும் கொள்முதலாளர் சொத்துக்குரிய அனைத்து கோருரிமைகளையும் இழப்பார். 11. மேற்கூறிய அட்டவணைப்படி சொத்துக்கு உட்பட்ட, **டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடுக்கு** தெரிந்த, ஏதேனும் வில்லங்கங்களின் விவரங்கள் இருந்தால் திட்டமிடும் ஏலதாரர் சொத்து வரி, மின்கட்டணம் ஏனைய சட்டப்பூர்வ பொறுப்பு நிலுவைகள் உட்பட சொத்து மீதான வில்லங்கங்கள் குறித்து தங்கள் சொந்த தனி விசாரணைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார். **12. அனைத்து பிற விவரங்களுக்கு அல்லது மின்–ஏலம் மீதான இயங்குதள பயிற்சி நடைமுறைக்கு, எதிர்நோக்கும் ஏலதாரர்கள்– சேவை வழங்குநர், M/s.4Closure, பிளாக் எண்.605 A, 6 ஆவது தளம், மைத்ரிவனம் வணிக வளாகம், அமீர்பேட், ஹைதராபாத்–500038 என்ற முகவரியில் ஒருங்கிணைப்பாளர்கள் திரு.அரிஜித் குமார் தாஸ், 8142000725, 8142000066, 8142000062, மின்னஞ்சல்: arijit@bankauctions.in மற்றும் மின்னஞ்சல்: info@bankauctions.in அல்லது மணீஷ் பன்சால், மின்னஞ்சல் முகவரி Manish. Bansal@tatacapital.com அதிகாரப்பூர்வ அதிகாரி, கைபேசி எண் 8588983696 தொடர்பு கொள்ளலாம். உங்கள் விசாரணையை வாட்ஸ்அப் எண்– 9999078669–க்கு அனுப்பவும்.** 13. உயர்ந்தபட்சமாக அறிவிக்கப்பட்ட ஏலத் தொகை மீது 1% மூலத்தில் வரி பிடித்தம் பொருந்தும். மேலும் அது உயர்ந்தபட்ச ஏலதாரரால் செலுத்தப்பட வேண்டும். பணப்பட்டுவாடா ஆனது உரிமையாளர்/ கடன்தாரர்(கள்) பான் எண்ணில் செலுத்தப்பட வேண்டும் மேலும் சலான் நகல்பிரதி எங்கள் நிறுவனத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். 14. மேற்கூறிய விவரங்களுக்கு கீழ்க்காணும் கடனீட்டுக் கடனீந்தோரின் இணையதளத்தில் கொடுக்கப்பட்ட இணைப்பை படிக்கவும் https://surl.li/ydfadc 15. மேலும் https://www.tatacapital.com/property-disposal.html **இணைப்பையும் காண்க.**

கவனத்தில் கொள்க– டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆனது இந்த சொத்து விற்பனை/ஏலத்துக்காக குறிப்பிட்டுள்ள ஏலம் விடும் கூட்டுதாரரைத் தவிர ஏதேனும் தரகர்/முகவரை நியமிக்கவில்லை. விருப்பமுள்ள நபர்கள் இது சம்பந்தமாக அனைத்து சந்தேகங்கள் மற்றும் விசாரணைக்கு கீழேக் கையொப்பமிட்டவர் அல்லது அதிகாரப்பூர்வ அதிகாரியை மட்டும் தொடர்பு கொள்ள வேண்டும்.

இடம் : தமிழ்நாடு, | ஒம்/– அதிகாரப்பூர்வ அதிகாரி
நாள்: 13.08.2024 | டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்